www.tamilarangam.net



# பிரியமான விரோதிகளே!

நான் இப்படி எமது இனிய தமிழ் மக்களைப் பார்த்து 'பிரியமான விரோதிகளே' என்று விழித்துக் கூறுவது சிலருக்கு ஆச்சரியமாகவும், சிலருக்கு வேதனையாகவும் இருக்கலாம். ஆனால் நான் ஏன் தமிழ் மக்களைப் பார்த்து அப்படிக் கூறினேன் என்றால் எமது ஈழப்போராட்ட வரலாற்றில் தமிழீழ விடுதலைப்புலிகளின் (LTTE)ன் அட்டகாசங்களையும் அராஜகங்களையும், அவர்கள் தமிழீழப் போராட்டத்தை பல வழிகளிலும் பின்தள்ளும் வேலைகளையும் செய்கிறார்கள் என்பதை பலர் பார்த்துக்கொண்டு கண்மூடித்தனமாக நடப்பதைப்பார்த்தே அப்படிக் கூறினேன். எமது ஏனோதானோ என்ற போக்காலேயே ஈழப்போராட்டம் இன்று இந்த அழிவுப் பாதையில் வந்து நிற்கிறது.

எமது ஈழப் போராட்ட வரலாற்றில் நாம் குறுகிய காலத்தில் வளர்ந்து விட்டோம் என மற்றைய நாட்டு மக்கள் உதாரணம் கூறிய நிலையில் எமது வளர்ச்சி இருந்தது. அந்த நிலைமை தற்சமயம் புலிகளின் அறிவீனமான வழிநடத்தலால் அழிந்து கொண்டிருக்கின்றது. ஈழப் போராட்டம் ஆரம்பமான வேளையில் ஈழமக்களின் விருப்பங்கட்கேற்ப ஈழப்பகுதியில் பல போராட்டக் குழுக்கள் உருவாகின. அவை பல தலைமைகளில் பல பெயர்களில் இருந்தாலும் அவை ஒரே திசையை நோக்கியே இருந்தன. ஆனால் புலிகளோ பல வழிகளிலும் அதாவது அவர்களது செயற்பாடுகள் யாவும் ஈழப்போராட்டத்தை பின் தள்ளக் கூடியதாகவே இருக்கின்றது. அவைபற்றிய விபரத்தை நேரடியாக சுருக்கமாக உங்களுக்குத் தருகிறேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அன்பர்களே, புலிகளின் ஆரம்ப போராட்
ட தன்மையானது ஆனது, அடித்து விட்டு ஓடி
ஒளிதலாம் (HIT AND RUN) இறந்த தமிழர்களோ அனேகம்.
ஆரம்பத்தில் இவர்கள் ஒரு இராணுவத்தை சுட்டு விட்டு
இந்தியாவுக்கு ஓடி ஒழிந்து விடுவார்கள். ஆனால் அதன்
பின் இராணுவத்தாரும், பொலிஸ் அதிரடிப்படையாரும்
அப்பாவி, அநியாயமாகி இறந்த அப்பாவித் தமிழர்
களை கொன்றொடுங்காது. கற்பழிக்கப்பட்ட பெண்
களோ நூற்றுக்கணக்கில். அழிந்த சொத்துக்களோ
கோடிக்கணக்கில். இந்த நிலையில் இறந்த இடைத்தோடு
இயங்கிவந்த அமைப்புக்கள் தமது பாதையில் மாற்றத்
தை செய்ய வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டனர்.
சில புதிய இயக்கங்கள் உருவாகி புலிகளோடு சேர்ந்து
போராட்டப்பாதையையே திசை திருப்பின. இதுவல்
அந்நிய இயக்கம் என்று கருதிய யாவும் இந்திய
உதவியையும் எடுத்துக்கொண்டு ஈழத்தில் இந்தியா
வை படையெடுக்கப்பண்ணும் முயற்சியிலும் ஈடுபட்டனர்
இதில் TELO வும் LTTE யும் முதலிடம் வகித்தனர்.
காலப்போக்கில் புலிகள் தாம், பெரும்போதும் தமிழ்பத
திலை கோலவிக்க வேண்டுமானால் மற்றைய அமைப்
புக்களை முடிக்கவேண்டுமென முடிவுசெய்தனர். அத்திட்
டத்தின் அடிப்படையிலேயே நிலைமைப்பதவிக்காக
தம்முள் பலரைக் கொன்றதைவிட மற்றைய அமைப்
புக்களான TELA, TELO, PLOTE, EPRLF ஆகியவற்றை
யும் அழித்தனர். இந்த அழிப்பு வேலையால் செய
லிழந்த போராளிகளோ ஆயிரக்கணக்கில். இந்த
அழிப்பு வேலையின் காரணம் தாம் தனியே நின்று
தன்னை பிடிப்பதல்ல. இந்தியாவின் உதவியால் கிடைக்
கும்போதும் அழிப்பது ஆட்சியை நாம் ஆளவேண்டும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்பதேயாகும். அத்திட்டத்தால் செய்யப்படும் இத்தகைய கொலை, கொள்ளை, கற்பழிப்பு, ஆட்கடத்தி பணயப் பணம் (RANSOM) வாங்குதல், போதைவஸ்து கடத்துதல், தமது இயக்கத்தின் தலைமைப்பதவியைக் கைக்காக பலரைக் கொல்லுதல், மற்றைய இயக்க போராளிகளையும், இயக்கத்தலைவர்களையும், ஆதரவாளர்களையும் அழித்தல், மற்றைய அமைப்பு போராளிகளையும் ஆதரவாளர்களையும் கடத்தி சித்திரவதை செய்தல், புலிகளின் போக்கு பிழையானது என விமர்சித்த பொதுமக்களை கடத்தி கொலைசெய்தல், பல அடுக்கு அமைப்பு போராளிகளை உயிரோடு டயர்போட்டு உருத்தி கொளுத்துதல் இப்படியான சிங்கள இராணுவத்தினும் பார்க்க படுமோசமாக தமிழர்களை தாக்கி துன்புறுத்தும் புலிகளைப் பார்த்துக் கொண்டும் பாராமல் இன்றும் தெரியாதவர்கள் போல் இருக்கும் புலிதாசர்களைப் பார்த்துத்தான் பிரியமான விரோதிகளே என்று கூறினேன்.

ஈழப் போராட்ட வரலாற்றிலே ஒரு சில அமைப்பு தவிர்ந்த மற்றைய அத்தனை அமைப்புக்களும் கொள்கைகளின் மூலம் பலம் பெற்றுக் கொண்டே தமது இயக்கத்தை வளர்க்க முற்பட்டனர். இதில் எதுவாவது இக்கொள்கை விடயத்தில் புலிகளின் அமைப்புத்தான் எதிலும் மேலிடம் வகித்தது என்று கூறுதல் மிகையாகாது. இக்கொள்கைகளை இவர்கள் தனியார் வீடுகள், தனியார்கடைகள், அரசு கடைகள் கொள்ளை அரச வங்கிகள், அரச திணைக்களங்கள் அபகரித்தலையும் செய்தனர். அதனை பலவீனத்திலும் தாக்கப்பட்டவர்கள் பொதுத்தமிழ் மக்கள் என்றால் மிகையாகாது. இதை எந்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தமிழனும் நடப்புக் கேட்காது பார்வையாளர்க ளாகவே இருந்தனர். அதனால் தான் அவர்களைப் பார்த்து பிரியமான விரோதிகளே என்றேன்.

இப்புலிகளின் தலைவர் பிரபாகரன் ஓர் கள்ளக்கடத்தல்காரன், அதையே தனது பிழைப்பாகக் கொண்டவன். அதோடு பிரபல கொலைகாரனுமாவான். இவன் ஈழப் போராட்டத்தில் பல கொலைகளைச் செய்து தலைமை பறித்தானே தவிர உண்மையான போராட்டத்துக்குத் தலைமை வகிக்கும் தகுதி இவனுக்கு என்றும் இருந்ததில்லை. இவன் அரசியலைத் தனது பிழைப்புக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான். ஆரம்பத்தில் இவன் தமிழரசுக்கட்சியின் கைக்கூலியாகவும் இருந்தான். தமிழரசுக்கட்சியில் இருந்து விலகியோரையும், மாற்றுக் கட்சிகளில் இருந்த தமிழர்களையும் கொலை செய்தான். அந்த வரிசையில்த்தான் கொலைத்திலும், துரையப் பாவும், அதைத் தொடர்ந்து பல தமிழ் பொலிஸ் அதிகாரிகளும் கொலை செய்யப்பட்டனர். இதெல்லாம் தமிழீழம் காணச் செய்த கொலைகள் அல்ல. தமது தனிப்பட்ட பழிவாங்கல்களும் அது சம்பந்தமாக தொடர்ந்த பொலிஸ் அதிகாரிகளுமே கொலை செய்யப் பட்டனர். இப்படியான கொலைகளைத் தொடர்ந்த இவர்கள் அதற்கு அரசியல் சாயம் பூச முனைந்தனர். அதற்கு தமிழரசுக்கட்சிக் காரரும் மற்றும் சிலரும் ஒத்து நின்றனர். அதனால்த்தான் அவர்களைப் பார்த்து பிரியமான விரோதிகளே என்றேன்.

இப்புலிகளும்பல இப்படிக் கொலை களைச்செய்து அரசியல் சாயம் பூசத் தொடங்கியதும் புலி இயக்கத்தின் ஆரம்பகர்த்தாவாக இருந்த சரவண ன். தற்போதைய தலைவர் பிரபாகரன் தான் தலைமைப்

பதவியை எடுப்பதற்காக கொலை செய்தான். அதன்பின் புலிகளின் மற்றும் சில கொலை கொள்கைகளில் முன்னின்று வெற்றிகண்டவரும், புலிகளின் அதி பராகவும் இருந்த உமாமகேஸ்வரனை அவனது காதல் விவகாரத்தைக்காட்டி இயக்கத்தை விட்டு வெளியேற்றியது மட்டுமல்ல, அவன் வேறு இயக்கம் ஒன்று தொடங்கியுள்ளான் என்றதற்காக அவனை சுட்டுக் கொல்ல முயன்றான். இப்படியாக தனது இயக்கத்திற்குள்ளேயே தனது தலைமையை உதாசிப்படுத்த பல கொலைகளை இவன் செய்து கொண்டிருந்ததை பார்த்துக் கொண்டிருந்த புலி அனுதாபிகளையும் புலி ஆதரவாளர்களையும் பார்த்துத்தான் பிரியமான விரோதிகளே என்றேன்.

இப்படியாக தனது இயக்கத்துள் கொலைகளைச் செய்து கொண்டிருந்த புலிகள் மற்றைய விடுதலை இயக்க தலைவர்களையும் போராளிகளையும் கொன்று குவிக்க தொடங்கியது. அவை ஒன்று, இரண்டு என்று என்ற நிலை போய் நூற்றுக்கணக்கில் என்ற நிலை வந்துவிட்டது. இது வரை இராணுவத்தினர் கொன்ற தமிழ்ப் போராளிகளைவிட புலிகள் கொன்று பலியாகிய தமிழ்ப் போராளிகள் தான் கூடுதலாக உள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கும் எமது வெளிநாட்டுப் பகுத்தோடர்களையும், புலிக்கு பணத்தை வாரி வழங்கும் கோடீஸ் வள்ளல்களையும் பார்த்து பொறுமையிழந்து தான் பிரியமான விரோதிகளே என்றேன்.

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அன்பர்களே இந்தப் புலிக்கும்பல், சுந்தரம், ஒபரோய் தேவன் போன்றவர்களை இந்தியாவிலும் வைத்து நூற்றுக்கும் மேற்பட்ட ரெலோ போராளிகள், அதேபோல பல PLOTE போராளிகள், அண்மையில் EPRLF ஐச் சேர்ந்த கொமாண்டோக்கள் அடீன், நேசன் போன்றோரும் நூற்றுக்கும் அதிகமான EPRLF போராளிகள் மற்றும் மேற்கூறிய இயக்கப் போராளிகளைக் கொல்ல மறுத்த பல புலிப் போராளிகளையும் கொன்று குவித்து பழிவாங்கியுள்ளனர். இவ்வாறு போராளிகளைக் கொல்ல புலிகட்கு நெடிய தினங்களே தேவைப்பட்டது. ஆனால் சிறிலங்கா இராணுவம் இவ்வாறு போராளிகளைக் கொல்வதானால் தம்முள் பல அழிவுகளோடு பல வருடங்கள் ஆகியிருக்கலாம். ஆனால் சிறிலங்கா இராணுவத்துக்கு எந்த அழிவுமில்லாமல் இந்த வேட்டை புலிக்கும்பல் வெளிநாடுகளில் பெருந் தொகை நிதி திரட்டிச் சாப்பிட்டு வாட்டு, ஷெல் செய்வதென அனுப்பிய வேட்டுகள், மாத்திரைகள், திரியும், பணமுதலைகளிடம் சேர்த்த பணத்தைக் கொண்டு வாங்கிய ஆயுதங்களைப் பாவித்து இத்தனை ஈழ விடுதலைப் போராளிகளையும் கொன்று ஈழப் போராட்டத்தை பல வருடங்கட்கு பின்னடையச் செய்ததோடு, தமிழினத்தின் போராட்டத்திற்கும் ஒரு அழியாத வடுவை உருவாக்கிவிட்டனர். இதைப் பார்த்து சந்தோசப்பட்டு, அதை பெரிய சாதனையாக பிரச்சாரம் செய்யும் வேளையில் எதுவுமற்ற சோற்றுப் பிண்டங்கள் மாதிரித் திரியும் மடையர்களைப் பார்த்து நான் பரிதாபமான விரோதிகளே என்றேன்.

இக்கும்பல் தமது கொலை வெறிக்கு பல உதிரிகளைப் பாவித்து சில இளைய இயக்கங்களை உருவாக்கி அவர்கள் மூலம் பல வகையான அராஜகங்களையும் செய்கின்றனர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்கின்றனர். இவர்கள் சிறப்புத்துறையாய் பல கொலைக்கொள்ளைகளையும் மற்றும் ஆளையும் பொருட்களையும் கடத்தி- கடத்தல்களில் பணயப் பணம் பெறுகின்றனர். இப்படி பணயப்பணம் (RANSOM) கொடுக்காதவர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். பல வீடுகளில் பணம் சேர்க்கும் பாணியில் புகுந்து சேர்த்தனர். அது கிடைக்காத இடங்களில் TV, வீடியோ, போன்றவற்றை எடுத்துச் செல்கின்றனர். இவற்றைத் தட்டிக் கேட்ட சில நண்பர்கள் சுடப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். அதோடு புலிகளுக்கு எதிராக எவரும் எதுவும் கதைக்கக் கூடாது என்றும் மீறிக் கதைப்போருக்கு 500 தண்டமும் 10 கசையடிகளும் என அறிவித்துள்ளனராம். வெளிநாடுகளில் இருந்து யாழ்ப்பாணம் போக விரும்பும் தமிழர்கள் பலர் கொழும்புவரை சென்று, அங்கு தமது முக்கிய உறவினரைக் கூப்பிட்டு பார்த்து விட்டு திரும்புகின்றனராம் காரணம் யாழ் போனால் புலிகள் இவர்களை பிடித்து வைத்துக் கொண்டு பணயப்பணம் கேட்டு சித்திரவதை செய்வார்கள் என்ற பயத்தினாலாகும். இதையெல்லாம் பார்த்துக்கொண்டும் தட்டிக் கேட்காது தொடர்ந்து புலிகட்கு உதவிக்கொண்டிருக்கும் உங்களைப் பார்த்துத் தான் பிரியமான விரோதிகளே என்கிறேன்.

போராட்டம் என்ற போர்வையில் போராட்டத்திற்கு என வெளிநாடுகளில் சேர்க்கப்பட்ட பல கோடி ரூபா பெறுமதியான வெளிநாட்டு பணத்தை பல ஒன்றுமறியாத தமிழ் இளைஞர்களைப் பாவித்து போதைவஸ்து வியாபாரம் செய்தனர். இதனால் இன்று நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் போதைவஸ்துக்கு அடிமையாகி அழிந்து கொண்டிருப்பது மட்டுமல்ல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் உலகில் பலபாகங்களிலும் சிறைகளில் இருந்து வாடுகின்றனர். குறிப்பாக ஐரோப்பிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாடுகளில் 400க்கும் மேற்பட்ட இளைஞர்கள் சிறையில் உள்ளனர். அதேபோல் இந்தியச் சிறைகளில் 50க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்களும் இருப்பதாக அறியப்படுகிறது. இதேபோல் கனடா, அமெரிக்கா, மத்தியகிழக்கு நாடுகளிலும் பல தமிழர்கள் சிறைகளில் உள்ளனர். இந்த போதை வஸ்து வியாபாரத்தினால் இவ்வாறு இளைஞர்கள் சிறைகளில் இருப்பதை விட பல கோடி ரூபா பெறுமதியான போராட்டத்திற்கென சேர்க்கப்பட்ட வெளிநாட்டுப் பணம் அநியாயமாகப் பறிகொடுத்துள்ளனர். (வெளிநாட்டு சங்க இலகாவிற்கு) இப்படியான அழிவுகளை தெரிந்திருந்தும் தெரியாதவர்கள் போல் இருக்கும் புலி ஆதரவாளர்களைப் பார்த்துத் தான் பிரியமான விரோதிகளே என்கிறேன்.

இத்தம்பல் தாம் மற்றைய அமைப்புக்களை விட பெரிதாக இருக்க வேண்டும் என்பதற்காக மக்களை தமது பக்கம் சேர்ப்பதை விடுத்து மற்றைய அமைப்பு தலைவர்களையும், போராளிகளையும், ஆதரவாளர்களையும் அழித்தனர். அதுமட்டுமல்ல மற்றைய அமைப்பு ஆதரவாளர்களின் வீடுகள் பலவற்றை குண்டுவைத்து தகர்த்துள்ளனர். இவர்கள் மற்றைய இயக்கங்களை அழிக்கிறோம் என்ற பெயரில் பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை சூறையாடியதோடு பல கோடி ரூபா பெறுமதியான வீடு வாசல்களை குண்டுவைத்து தகர்த்துள்ளனர். மற்றைய இயக்க ஆதரவாளர்கட்கு சொந்தமான வாகனங்களை பறித்ததோடு பலவற்றை அழித்துள்ளனர். அதுமட்டுமல்ல அவர்களின் T.V, வீடியோ போன்ற பொருட்களையும் எடுத்துச் சென்றுள்ளனராம். இதையெல்லாம் பார்த்துக் கொண்டு தொடர்ந்தும் புலிகட்கு முண்டு கொடுக்கும் முண்டங்களைப் பார்த்துத்தான் பிரியமான விரோதிகளே என்கிறேன்.

வெளிநாடுகளிலே வாழும் தமிழர்களிடம் மேலும் வெருட்டிப் பணம் சேர்க்கின்றனர், கொடுக்காவிடில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

யாழ்ப்பாணக் கோட்டையில் அவர்களின் பெற்றோர் சகோதரரை இந்திய
வதைக்குள்ளாக்குகின்றனர். வெளி நாடுகளில் இருந்து
பெறும் தபால்களைத் திறந்து அதில் காசோலைகள் போதல்
அக்கப்படுத்தியவர்களிடம் போய் இன்று பணம்
பெற்று தானே என்று கூறி பணத் தருமாறு கேட்டு
பணம் பறிக்கின்றனராம். இவர்களின் இந்த
அராஜகச் செயல்பாட்டு காரணங்களே இல்லையா என
அந்த ஏழைமக்கள் எண்ணிவிடக் கருதுகின்றனர்.
இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தும் புலி வாழ்தலை
பார்த்து தான் பெரியமான விரோதிகளே என்றேன்.

புலிகள் எழுத்தில் கொடுத்தும் தரப்பாரைப்
பார்க்கும் போது இவர்கள் அரசின் கைக்கூலிகளோ என்பதைக்
இவர்களின் நடவடிக்கைகள் இருப்பதை மக்கள் நன்கு உணரத்
தொடங்கிவிட்டனர். புலிகளும் சிறீலங்கா இராணுவத்தின்
ரும் இடையில் இரகசியமாய் நிறைத்தன்று யுத்த நிறுத்த ஒப்பந்
தம் ஒன்று ஏற்பட்டது. அன்று இந்த ஒப்பந்தத்தை
மீறி இராணுவம் சில இடங்களில் தாக்குதல்களை நடாத்தியது.
அதில் சில பொதுமக்கள் இறந்தும் உள்ளனர். ஆனால்
புலிகளோ அதற்கு எதிர்த்தாக்குதல் நடாத்து வதை விடுத்து
EPRLF போராளிகளை தேடி அழிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.
அப்படி 7-8 EPRLF போராளிகளை இவர்கள் இரகசியமாய்
தீர்த்தனர் என அழித்ததாக இந்திய பத்திரிகை NEWS TODAY
தெரிவிக்கின்றது. இலங்கை அரசாங்கம், புலிகளும் தம்
போதிய ஆயுதம், இராணுவ ஆலோசகர்கள் (CIA, MOSSAD)
உடன் சேர்ந்தவர்கள் என்று தெரியவாகாது. இந்த வட்டம்
இந்தியாவில புலிகளிடம் இந்திய அரசை அம்பலப்படுத்திய
ஆவணங்களை எண்ணிடம் (DOCUMENTS) ஆயுதங்களைக் கொண்டு
அறியமுடியும். இதை இந்தியப்பத்திரிகையான 'AMRITA
BAZAAR PATRICA NOV. 86' பதிவாக வெளியிட்டது.

www.tamilarangam.net



இதையெல்லாம் பார்த்துக் கொண்டு இருந்த தமிழ் மக்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம், புலிகள் தானே TELO வை CIA ஆதரவாளர்கள் என்றார்கள்; சத்தியேந்திரா, சந்திரகாசன், தமிழ் செய்தி நிலையத்தினர் (TIC) எல்லாம் CIA என்றார்கள் இப்போ உண்மையான CIA ஏஜண்டுகள் யார் என்பதை அடையாளம் காணும்போது தமது ஏமாற்றத்தைப் பார்த்து கவலைப்படும் மக்கள் மௌனமாகப் பார்க்கத்தான் பிரியமான விரோதிகளோ என்றேன்.

புலிகளின் யாழ் கோட்டைப் போர்ப்பாடல் அட்டகாசங்கள், அநியாயங்கள், அராஜகங்களோ அனந்தம். இவர்கள் கோட்டையோடு தமது கட்டுப்பாட்டில் என்றுப் பிரச்சாரம் செய்கின்றனர். இதைப் புலித் தலைவர்கள், ஆதரவாளர்கள் கண்மூடிக் கொண்டு கேட்டு நம்பிக்கொண்டுள்ளனர். உண்மை நிலை யாழ்த்தில் உள்ள மக்களுக்கு புரியலாம். ஆனால் வெளிநாட்டில் உள்ள தமிழர்களோ உண்மை நிலையை உணர விரும்பாத உணர்வுகளாகவே உள்ளனர் என்றால் மிகையாகாது. உண்மை நிலை என எவரும் சிந்திப்பது இல்லை. புலிகள் கிளப்பும் பல பொய்களை எடுத்துக் கொடுக்கிறார்கள் இவர்களும் அதை அப்படியே நம்பி ஆமோதிக்கும் வேடுபவர்களாகவே இருக்கின்றனர்.

அன்பர்களே, யாழ் கோட்டையில் புலிகளிடம் மற்றைய அமைப்பு போராளிகள் பண்மடங்கு அதிகமாக இருந்தனர் என்பதையும் அவர்களின் தாக்குதல்களையும், சில அமைப்புகளின் (கோட்டையில் நடாத்திய) கோட்டையோடு தவிர்ந்த, பலத்த பல் தாக்குதல்களையும், குறிப்பாக அநுராதபுரம், பொலநறுவை, கொழும்பு, போன்ற இடத்து தாக்குதல்களும், இந்திய ஆமியின் எச்சரிக்கைகளும் தான் இராணுவத்தை தமது முகாம்களுள் முடக்கச் செய்ததே ஒழிய புலிகளின் தாக்குதலால் மட்டும் அல்ல

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

என்பதை இந்த புலி ஆதரவாளர்களும், புலிகளும் உணர்ந்து கொள்ளவேண்டும். அதை உணர்ந்தும் ஏதோ புலிகளின் சாகசவிளையாட்டால்தான் இராணுவத்தினர் பின்வாங்கல் மேற்கொண்டனர் என புலிகள் கூறுவதைக் கேட்டு எனக்கிருந்த சந்தேகங்களைப்பார்த்துத்தான் பிரியமான விளக்கங்களை என்றேன்.

யாழ் குடாநாடு தவிர மற்றைய இடங்களைப்பார்த்தோமானால் அங்கெல்லாம் புலிகளைத் தவிர்ந்த மற்றைய அமைப்புகள்தான் இராணுவத்தோடு மோதுவதைப் பார்க்கலாம். ஆனால் புலிகளோ யாழ் குடாநாட்டின் முடங்கிக்கொண்டு எந்த ஒரு இராணுவமுகாமையும் அசைக்க முடியாத நிலையில் இருந்து கொண்டு யாழ் குடாநாடு தமது கட்டுப்பாட்டில் (CONTROL) எனக் கதைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். கடந்த வருடத்தை எடுத்துப் பார்த்தோமானால் புலிகளின் யாழ் குடாநாட்டில் கொன்ற இராணுவத்தின் தொகை 25-30 இருக்கலாம். ஆனால் புலிகளின் கொல்லப்பட்ட தமிழ்ப் போராளிகளோ 500 பேர்வரையாகும். அதுமட்டுமல்ல குடாநாட்டுள் அவர்கள் செய்த மற்றைய அழிவுகள் பல பற்றி பின்பு கூறுகின்றேன். உண்மையில் ஒரு பகுதி நாடு தமது கட்டுப்பாட்டில் என்றால் அந்த அந்த நாட்டு இராணுவம் இருக்கமுடியாது. ஆனால் யாழிலோ புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தால் இராணுவமுகாம்கள் கூடக் கொண்டு போகின்றது. உதாரணத்திற்கு இவற்றைக் கூறினால் புலிகள் TELO வை அழித்தபின் மண்டைதீவு, அல்லைப் பிட்டி, பண்ணை, மாதகல் போன்ற இடங்களில் பல புதிய இராணுவ முகாம்கள் உருவாகின பின் EPRLF ஐ புலிகள் அழித்தபின் கோட்டையில் இருந்த இராணுவம் வெளிக்கிட்டு யாழில் வேறு பல புதிய இராணுவ முகாம்களை உருவாக்கியுள்ளது. அதில் யாழ் துறைமுகத்தோடும் ஓர் இராணுவ முகாமாகியுள்ளது.

இதில் இருந்து பார்த்தீர்களானால் புலிகளின் கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணம் என்பார்கள், ஆனால் அந்த புலிகளின் அட்டகாசமே இராணுவத்தின் அட்டகாசத்தை தான் உடையுள்ளது. இந்த நிலைமையிலும் வெளிநாடுகளில் வதியும் படித்த மக்கள், புலிகள் இறுதியாக உள்ள இயக்கம் என்றும் அழித்தால் நாம் யாழில் சோசலிசம் பரவாது ஆதலால் புலிகட்கே பணத்தைக் கொடுப்போம் என தமது புலிமாதப்பிரச் சாரத்தை முடுக்கிவிட்டுள்ளனர். அதோடு மற்றைய அமைப்பு களுக்கு பணத்தைக் கொடுத்து விரயம் செய்யாது புலிகளுக்கு அதைக் கொடுத்து அவர்கள் புலிகளைக் கொண்டு அழித்து விட்டால் பின் புலிகளுக்கு தமது ஆதரவை நிற்பாட்டி இராணுவத்தின் உதவியோடு புலிகளையும் அழித்து விட்டால் பின் தமது சோசலிசத்துவதராண்டை விரைவாகக் காணலாம் என்பதே வெளிநாட்டு பணமுதலைகளின் திட்டமாகும். இதை உணராத புலிக்கூட்டத்தைப்பார்த்து நான் பரியமான விரோதிகளே என்றேன்.

புலிகள் தமது தமிழீழத்தை யாழ் குடா நாட்டில் தொடங்கி படிப்படியாக போராட்டத்தை முன்னெடுத்து மற்றைய இடங்களைக் கைப்பற்றுவதே அவர்களின் திட்டம் என பிரச்சாரத்தை முடுக்கிவிட்டுள்ளனர். ஆனால் இதுவரை யாழ் குடாநாட்டில் எந்தவொரு இராணுவமுகாமும் புலிகளால் அழிக்கப்படவில்லை. ஆனால் மேற்கூறியது போல் யாழ் குடாநாட்டிலும் மற்றும் பிறபகுதியிலும் இராணுவமுகாம்கள் கூடிக் கொண்டே போகிறது. குறிப்பாக புலிகளின் கட்டுப்பாட்டில் எனக் கருதப் படும் யாழ் குடாநாட்டில் TELO, EPRLF, PLOTE ஆகியவை புலிகளால், இயங்காமல் பண்ணியபின் பல இராணுவமுகாம்கள் கூடி யுள்ளது என மேலே கூறினேன். இவற்றை அழிக்க புலிகள் எடுத்த முயற்சியும் தோல்வியில் முடிந்தது

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

யாவரும் அறிவர். இந்த நிலையில் இவர்களால் போராட்டத்தை முன்னெடுக்க முடியுமா என்பதே கேள்விக் குறியாக உள்ளது. இவர்கள் யாழ்ப்பாணத்தை விட இராணுவத்துக்கு மட்டக்களப்புக்கும் நிதி உதவுகிறது. அதுமட்டுமல்ல புலிகள் தற்சமயம் யாழ் குடாநாட்டின் இராணுவ முகாமுக்கு காவல் நிற்கும் வேளையில் மற்றைய கிழக்குப்பகுதிகளில் தமிழ்மக்கள் இராணுவத்தால் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். திருமலையில் மட்டும் 40-45 தமிழ்க்கிராமங்கள் இராணுவத்தால் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. அதேபோல் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு மாவட்டங்களில் பல தமிழ்க்கிராமங்கள் இராணுவத்தால் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. இந்த இடங்களில் எல்லாம் புலிகளின் எதிர்த்தாக்குதலே இல்லை என்றே கூறலாம். தாம் இந்த இடங்களில் இருக்கிறோம் என்பதைக் காட்ட எப்போதாவது எங்காவது ஓர் இடத்தில் ஓர் தாக்குதல் நடாத்திவிட்டு யாழ்ப்பாணத்துள் ஓடி ஒளிந்து கொள்கின்றனர். உண்மையில் குடாநாடு தவிர்ந்த மற்றைய இடங்களில் இராணுவத்துக்கு நேரடியாக முகம் கொடுத்து சண்டையிட்டுக் கொண்டிருப்பவர்கள் மற்றைய இயக்கத்தவரே என்றால் மிகையாகாது. ஆனால் அதையும் மற்றைய அமைப்புக்கள் வெற்றிகரமாக செய்ய முடியாத அளவுக்கு புலிகள் பல வழிகளிலும் தடைகளாக உள்ளார்கள் என்பது யாவரும் அறிந்த பரம இரகசியமாகும். இந்த நிலையில் புலிகள் 1.1.1987 தொடக்கம் யாழ் குடாநாட்டின் நிர்வாகத்தை தமது கட்டுப்பாட்டின் கொண்டு வருவதாக அறிவித்தனர். அதைத் தொடர்ந்து இலங்கை அரசு யாழ் குடாநாட்டுக்கு போகும் உணவுப் பொருட்கள், எரிபொருட்கள், அன்றாடத் தேவைகள் முதலாக சத்திர சிகிச்சைக்கு அவசியமான பொருட்கள் எல்லாம் தடை செய்துள்ளது.

www.tamilarangam.net



அதோடு மின்சாரத்தையும் தடை செய்துள்ளது. இதனால் யாழ் குடாநாட்டில் பஞ்சம் தோன்றியுள்ளதாம். மக்கள் பட்டினியாலும், நோய்களினாலும் செத்துக் கொண்டிருக்கிறார்கள். புலிகள் தமது இராணுவ தோல்விகளால் அரச அதிகார எல்லைக்கும் எந்த நடவடிக்கைக்கும் முகம் கொடுக்கமுடியாத நிலையிலேயே தமது இராணுவத்தை அழைத்தனர். அதன் தாக்கம் இன்றுவரை காரியமே மக்களுக்குத் தெரிந்தது, முன்கூட்டியே திட்டமிட்ட புலிகளின் செயல்களை அறியக் கூடியதாகச் செய்துள்ளது. எனவே எந்தவித திட்டமுமற்ற முன்கூட்டியே, பொருளாதாரத்தை உணர்ந்து மாற்றுத் திட்டங்கள் மூலம் மக்களுக்கு உதவத்தெரியாது இப்போக்குக் கடைப்பிடித்துத் தோல்வியுற்றும் வேளையில் சோவியத் அரசியலின் வக்கிரத்துப் போன பலவற்றில் பார்த்தால் பெரியமான விரோதிகளே என்றேன்.

எனவே இனிய தமிழ்மக்களை யாழ்குடா நாட்டுக்கு வெளியே இராணுவம் பல வழித்தடை முகாம்களைப் போட்டு தமிழ்ப்போராளிகளையும் 14-40 வரையான தமிழ் இளைஞர்களையும் கைது செய்து சித்திரவதை செய்கிறது. அதில் பலர் கொலையும் செய்யப்படுகின்றனர். அதேபோல் யாழ் குடாநாட்டிலோ, புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது ஏனைய தமிழர் அமைப்புகளும் அதேபோல புலிகளும் குடாநாட்டில் பல வழித்தடை முகாம்களைப் போட்டு தமது அனுமதியில்லாத மற்றைய இயக்க இளைஞர்களை அனைவரையும் கைது செய்து சித்திரவதை செய்து கொலை செய்கின்றனர். இராணுவத்தினர் தமிழ்மக்களை பல முகாம்களில் அடைத்து வைத்திருப்பது போல் புலிகளும் பல தமிழ் மக்களை யாழில் பல முகாம்களிலும் அடைத்து வைத்துள்ளனர். முக்கியமாக நேவலர் போல்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வைகளை விட்டு, மற்றைய பகுதியில் பூசா முகாம்போன்ற முகாம்களை உருவாக்கி அங்கு தமிழ் இளைஞர்களையும் யுவதிகளையும் அடைத்து வைத்துள்ளனர்.

புலிகள் பொல் பொட் ஆட்சியில் செய்தது போல் யாழில் 50 வயதிற்கு மேற்பட்ட முதியோர்கள் தேவை யில்லை என்றும், தமது நிர்வாகத்தை ஏற்காத அனைத்து இயக்க ஆதரவாளர்களையும் அழிக்க வேண்டும் எனத் திட்டமிட்டுள்ளதாக அறியப்படுகிறது. ஆனால் ஏற்கனவே மற்றைய இயக்க போராளிகள், ஆதரவாளர்கள், நாட்டை விட்டு போய்க்கொண்டிருக்கின்றனர். முதியோர் பலரும் நாட்டை விட்டு ஓடும் நிலை ஏற்பட்டுள்ளது. இவையெல்லாம் பார்வையாளர் போல் பார்த்துக் கொண் டிருக்கும் உலகைப்பார்த்து நான் பிரியமான விரோதி களே என்றேன்

ஈழப் போராட்டத்திலே புலிகளின் போக்கையும் இராணுவத்தின் போக்கையும் ஒப்பிட்டுப்பார்த்தீர்களானால், இராணுவத்தினர் பொதுவாக தமிழர்கள் இலங்கையின் எப் பகுதியில் வாழ்ந்தாலும் அவர்களை துன்புறுத்துகின்றனர். 14-40 வயதுக்கிடைப்பட்ட இளைஞர்களையும், பெண்களையும் கைது செய்து சித்திரவதை செய்து பலரை கொலைசெய்து ள்ளனர். மட்டக்களப்பில் மட்டும் கடந்தவருடம் கைது செய்தவர்களில் 650க்கும் மேற்பட்டோர் கொலைசெய்யப் பட்டுள்ளதாக அறியப்படுகிறது. ஈழ விடுதலை இயக்க போராளிகளையும் ஆதரவாளர்களையும் கண்ட இடங்களில் சுட்டுக் கொல்லுகின்றனர். பெண்களைப் பிடித்து கற்பழிக்கின் றனர், பின் அவர்களை கொலையும் செய்கின்றனர். தமிழ் இளைஞர்களை உயிரோடு கொளுத்துகின்றனர். ஈழப்போராளி களை கொல்லுகிறோம் என்ற போர்வையில் குழந்தைகளை முதியோர்களை பெண்கள் உட்பட பலரை படுகொலை செய் துள்ளனர்.

www.tamilarangam.net



மேலே நான் குறிப்பிட்டிருக்கும் புலிகள் யாழ் கோட்டை முற்றுகை செய்வதற்கும் எந்தவிதமான வித்தியாசமும் இல்லை. புலிகளின் செயல் இங்கு இராணுவத்தின் செயலை விட பல மோசமானது. உலகில் எந்த போராட்ட வரலாற்றையும் பார்த்து வியந்தவர்கள் தற்போதைய நிலைமையைப் பார்த்து வெறுக்குமளவுக்கு புலிகள் போராட்டத்தை பின்னடையச் செய்துவிட்டனர். இந்நிலைமைக்கு காரணமாக இருக்கும் செயல்களைப் பார்த்துத் தான் பிரியமான விரோதிகளே என்றேன்.

இந்தியாவிலே ஒரு பிழைப்புக்காக அரசியல் நோக்கும் சில தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் தற்சமயம் ஈழ அரசியலை ஒரு பிழைப்பாகக் கொண்டுள்ளனர். அவர்களில் முக்கியமானவர்கள் அரசியல் அநாதைகளாக இருந்த நெடுமாறன், வை.கோ போன்றவர்கள். இவர்களும் இவர்களை போன்றவர்களும் ஈழப் போராட்டத்தின் அரிச்சுவடு தெரியாதவர்கள் புலிகளின் பணத்தில் உண்டு வாழும் மோசக்காரர்களாகிவிட்டனர். இவர்களின் கண்ணுக்கு ஈழப் போராளிகள் அனைவருமே புலிப்படைதான். ஈழப் போராட்டத்தை முன்னெடுக்க அனைத்து இயக்கங்கட்கும் உதவி கொடுக்க வேண்டிய இந்த மோசக்காரர்கள் புலிகளோடு சங்கமமாகிவிட்டார்கள். இது அவர்களின் சந்தர்ப்ப வாத அரசியலும் புலிகளின் அரசியல் வங்குரோத்து தனத்தையும்தான் காட்டுகிறது. இந்த சந்தர்ப்பவாதிகளின் பொய்ப்பிரச்சாரத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து பணத்தை வாரி வழங்கும் பேட்டை வாலாக்களைப் பார்த்துத்தான் பிரியமான விரோதிகளே என்றேன்.

இந்தியாவில் தமிழ் நாட்டை தளமாக வைத்து நின்று கொண்டு இந்தியத் துரோகத்தையும் செய்யும் புலித்தலைவர், மற்றைய அமைப்புக்களைப் பார்த்து அவர்கள்

இந்தியாவின் தூண்டுதலின் பேரில் பிரச்சாரம் செய்வதும்
அதைக் காரணம் காட்டி ஈழப் போராட்டத்தையே சீர்
குலைப்பதும் நடந்து கொண்டிருக்கிறது. ஈழப்பகுதியில்
இந்தியாவுக்கெதிரான சுவரொட்டிகள் ஒட்டுவதும், வெளிநாட்டி
லும் இந்தியாவுக்கெதிரான பிரச்சாரம் செய்வதும், ஆனால்
இந்தியாவல்லவோ நாம் இந்தியாவுக்கு எதிரானவர்கள் அல்ல
என அறிக்கை விடுவதும் புலிகளின் கைதேர்ந்த கயவா
ரம். இவர்களின் பாட்டு சித்தாந்தத்துக்கு ஒத்து ஊது
வது போல் தமிழ் நாட்டு பத்திரிகையாளரான ராம் போன்
றோரும் ஈழப்பத்திரிகை சுதந்திரனின் ஆசிரியரான கோவை
மகேசன் போன்றோரும் புலிகளுக்கு வக்காலத்து வாங்கி
எழுதிக் கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு இது ஒரு
பிழைப்பு. ஆனால் பல மேலைநாடுகள் இது விளங்கி
யது தெளிவு இப்படியான எத்தனங்களையும் அதை
நிறுவ உட்பட்டதையுமே பிரியமான விரோதிகளே
என்கிறான்.

எமதினிய தமிழ் மக்களே, இந்த புலிகளின் அராஜகங்
களை எப்படி ஒழிக்கலாம், ஈழப் போராட்டத்தை எப்
படி மீளமைக்கலாம் என எண்ணும் நாம் இந்நிலையில்
இருந்தோமானால் நாம் புலிகளிடம் பார்க்க தமிழினத்திற்கு
மேலும் துரோகமிழைத்தவர்களாகி விடுவோம். எனவே
ஈழத்திலும் சரி வெளிநாட்டிலும் சரி தமிழ்மக்கள் ஈழப்
போராட்ட விடயத்தில் எவரும் பார்வையாளர்களாக இராது
தமிழ் மக்களுக்கு எதிராகவும், ஈழப் போராட்டத்திற்கு எதிராகவும்
புலிகள் இழைத்து வருவதை தடுக்க முயலவும். அதன் முதல் கட்ட
மாக மேற்கு பேர்லின் தமிழர்கள் பலர் புலிகளிற்கு
பணம் கொடுப்பதை நிறுத்தினர். ஆனால் புலிகளோ அவர்
கள் பணம் தராவிடில் யாழ்ப்பாணத்தில் உள்ள உறவினர்
களை அது செய்வோம் இது செய்வோம் எனப் பயமுறுத்

www.tamilarangam.net



தியாகத்தோடு மட்டுமல்ல, அந்த புலிகளுக்கு எதிராக மக்கள் திரண்டெழுந்து மக்கள் அணி ஒன்றை உருவாக்கினர். அதைப் பொறுக்க முடியாத புலிகள் அந்த மக்களணியின் முக்கிய உறுப்பினர்களை படுகொலை செய்தார்கள். இதனைத் தமான் போன்ற சில முன்னணி உறுப்பினர் சிலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அதன் பின் அந்நாட்டு தமிழ் மக்கள் புலிகளின் அட்டகாசத்தை அந்நாட்டு பொலிஸ் படைக்கு அறிவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதன் பின் சில பல புலிகள் கைது செய்யப்பட்டனர். அதோடு மேலும் புலிகள் வெருட்டல்களை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதே போல் புலிகளின் போதைவஸ்து வியாபாரத்தால் பிரான்சில் புலிகளின் காரியாலயம் பாரிஸ் அந்நாட்டு பொலிசாரால் மூடப்பட்டுள்ளது. இதே போல் மற்றைய வெளிநாட்டு தமிழர்களும் புலிகளை திருத்த வேண்டுமானால் அந்நாட்டு உதவியை உடனடியாக நாடத் துணிய வேண்டும்.

கடைசியாக அன்பர்களே, புலிகளின் பொம்மலாட்டத்தை வெளிநாடுகளில் வாழும் தமிழர்களை விட ஈழத்தில் ஏழை மக்கள் நன்கு உணரத் தொடங்கி விட்டனர் என்பதை அந்த அண்மையில் நடந்த சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. கடந்த மாதம் புலிகள் EPRLF ஐ அழிக்க வெளிக்கிட்ட சமயம் நூற்றுக்கணக்கான மக்கள் ஆங்காங்கே திரண்டெழுந்து புலிகளின் தாக்குதலை மறித்து பாரிய மறியல் போராட்டம் நடத்தினர். அந்த மக்கள் வெளிநாட்டு தமிழர்கள் போல் கண்மூடித்தனமாக நடக்கும் இருக்க முடியாது என்பதை தமது மாபெரும் மறியல் போராட்டமூலம் எடுத்துக்காட்டியுள்ளனர். சில இடங்களில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதாவது சில கிராமங்களுக்கு புலிகள் போகவே முடியாத நிலையில் உள்ளது. இதில் இருந்து தெரிகிறது மக்கள் விழித்தெழுந்து விட்டார்கள் என்று. எனவே நான் வெளி நாடுகளில் வாழும் படித்த பெரியோர்களைக் கெஞ்சிக் கேட்கிறேன். இது வரையில் புலிகளின் தொண்டர்கள், வெளி நாட்டில் உருவான தேவையற்ற கருத்தும் படித்த பெரியோர்களாகிய உங்கள் சொந்த முறையில் சிந்தித்து நடப்பது அறிய முற்படுங்கள் எனக் கேட்கின்றேன்.

புலித்தலைவர் ஒருவர் ஆயுத அதிகாரமானவர்கள், போராளிகள் வரையறைக்குள்ளே ஈழப் போராட்டத்தில் மரணத்தை கண்டான். சாதாரண சாதாரண விளங்கிய இவர் புலி இயக்கத்தை விட்டு விலகிச் சென்றுள்ளார். உதாரணத்திற்கு சிலரைக் கூறினால், நிர்மலா, ராஜனி, கிட்டு போன்றவர்கள் வெளிநாட்டுப் படித்தவர்களாகவோ, நீங்கள் டாக்டர்களாகவோ, எஞ்சினியர்களாகவோ, பெரிய பட்டதாரிகளாகவோ இருக்கலாம். ஆனால் நீங்கள் கண்மூடித்தனமாக ஈழப் போராட்டத்தில் புலிகள் செய்யும் அராஜகத்தையும், அட்டகாசங்களையும் பார்த்தும் பாராதது போல் உள்ளீர்கள். அப்படி இருக்கும் நீங்கள் புலிப் படைப் போராளிகளையும் பார்க்க வேண்டியவர்கள்.

புலிப் போராளிகள் தமது தலைவனுக்கு பணிந்து நடப்பதாக சத்தியப்பிரமாணம் எடுத்தார் தலைவன் கூறுவது பிழை என்று தெரிந்தும் தமது உயிரைக் காக்கவும், தலைவனின் சொல்லுக்கு பணிந்தும் பயந்தும் தமிழரைக் கொல்லுகின்றனர். உண்மை நிலைச் சூறையாடுகின்றனர். தமிழ்ப்பற்றுள்ள யாழ் தடாகத்து தமது கட்டுப்பாட்டில் என்று கூறிக் கொண்டு பல கோடி பெறுமதியான வீடுகளை இடித்து தகர்க்கின்றனர். பொது நலங்களை பெற்றோல் ஊற்றிக் கொளுத்துகின்றனர்.

மற்றைய இயக்க போராளிகளை உயிரோடு பெற்றோல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உயிர்ப்பலி கொள்ளுகின்றனர். ஏழை மக்களை என்ற பேதமின்றி பலரைக் கடத்தி பணயப் பணம் (RANSOM) பெறுகின்றனர். கொடுக்க முடியாத ஏழைகளை சித்திரவதை செய்து கொலை செய்யப்படுகின்றனர். புலிகளின் போராட்ட முறையை விமர்சிப்பவர்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப்படுகிறார்கள். அப்படியான கொலைக்கு ஆளானவர்களில் ஒருவர் தான் மட்டக்களப்பைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவன் விஜிதரன்.

இவையாவும் தெரிந்தும் தெரியாது மௌனிகளாக, கண்மூடி ஊமைகளாக, கையாலாகாதவர்களாக, சோற்றில் அடித் தொண்டர்களாக, கோழைகளாக, பேடிகளாக இருந்து புலிகட்கு ஆதரித்து உதவி செய்வது இப்படிப்பட்டோர்கள், அவர்களின் அடாவடித்தனத்தை இப்படிப்பட்டோரும் அங்கீகரிக்கின்றார்கள், ஏனைய அமைப்பு போராளிகளையும் ஆதரவாளர்களையும் கொலை செய்வதோடு அவர்களை ஆதரித்து போராட்ட முன்னெடுப்புக்கு வேலை செய்வதைத் தடை செய்யாதீர் எனக் கூறுகின்றனர், புலித்தலைமை உங்கள் தலைவர் பிரபாகரனுக்கு உடனே எதிரிகளைத் தேர இந்த அநியாய இப்படிப்பட்ட போராட்டத்தை முன்னெடுக்க உதவுங்கள். இன்றேல் நீங்களும் தமிழினத்திற்கு துரோகமிழைத்த பாவிகளாகக் கணிக்கப்படுவீர்கள். இத்தகைய துரோகத்தையும் இழைத்த பிரபாகரன் தலைமையிலான புலிக் கும்பல் மட்டுமல்ல அதற்கு எவ்வகையிலும் துணை போன அத்தனை தமிழ் மக்களும் பெரிய விரோதிகளே. அதனாலேயே அப்படியான தமிழர்களை விடவும் மிகப் பெரிய விரோதிகளே என்று கூறினேன்.

நன்றி.

— ஏ.புத்து நக்கீரன் — LONDON. 5-1-1987.

படிப்பிரதிகள் செய்து மற்றவர்கட்கும் வழங்கவும். நன்றி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்